19.02.2026

MCOP.N0.1978/2024

P.W. 1. திரு. சந்தானம்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 2, 3ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை : –

நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் டிரைவராக வேலை பார்க்கிறேன். விபத்தில் இறந்துபோன ரஞ்சித்குமார் எனது மகன் என்றால் சரிதான். எனது மகன் கொத்தானர் மற்றும் பில்டிங் காண்டிரக்டர் என்பதை காட்ட தமிழ்நாடு அரசு தொழிலாளர் துறையில் இருந்து எந்த அடையாள அட்டையும் வழங்கப்படவில்லை என்றால் சரிதான். விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். எனது மகனின் வயது, வேலை, வருமானத்தை காட்டக்கூடிய ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பொதுவாக ரோட்டில் தார் போடும் வேலை நடக்கும்போது லாரிகள் மற்றும் நான்குசக்கர வாகனங்கள் மெதுவாக தான் இயங்கும் என்றால் சரிதான். எனது மகன் இருசக்கர வாகனத்தில் பின்னால் அமர்ந்து சென்றார் என்றால் சரிதான். இருசக்கர வாகனத்தை ஓட்டியவர் ரவிக்குமார் என்றால் சரிதான். விபத்து சம்மந்தமாக போலிசில் புகார் கொடுத்தது யார் என்றால் நான் தான். அந்த புகாரை போலிசார் எழுத நான் கையெழுத்துபோட்டுக்கொடுத்தேன் என்றால் படித்து பார்த்து தான் கையெழுத்துபோட்டேன். விபத்து சமயத்தில் இருவரும் தலைக்கவசம் அணியவில்லை என்றால் சரியல்ல. இருசக்கர வாகனத்தில் சென்ற இருவரும் தலைக்கவசம் கொண்டு சென்றார்கள் என்ற விவரத்தை

நான் போலிசாரிடம் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. இருவரும் தலைக்கவசம் அணியவில்லை என்றும் அது எனக்கு தெரிந்தும் நான் அதை போலிசாரிடம் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. எனது மகன் பில்டிங் காண்ரெக்டர், கொத்தனார் வேலை பார்க்கவில்லை என்றும், நான் தான் அவரை பார்த்து வந்தேன் என்றும் சொன்னால் சரியல்ல. எனது மனைவி என்ன வேலை செய்கிறார் என்றால் வீட்டுவேலைகள் தான் செய்வார். விபத்து சமயத்தில் இருசக்கர வாகனத்தில் சென்ற இருவரும் பேசிக்கொண்டே அதிவேகமாக சென்று தான் விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றும், லாரி ரோடு வேலை நடந்து கொண்டுயிருந்ததால் மெதுவாக சென்று கொண்டிருந்தது என்றும், இருசக்கர வாகனத்தை ஓட்டியவர் தான் விபத்திற்கு முழுக்காரணம் என்று சொன்னால் சரியல்ல. இருசக்கர வாகனத்தை ஓட்டியவரும், பின்னால் அமர்ந்து சென்றவரும் தலைக்கவசம் அணியாமல் சென்றதால் 2,3 எதிர்மனுதாரர்கள் எந்த இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரின் ஓட்டுநர் காரணம் இல்லை என்பதால் 2,3 எதிர்மனுதாரர்கள் எந்த இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. நான் பல்வேறு தலைப்புகளின் கீழ் கோரியுள்ள இழப்பீடு தொகை மிக அதிகமானது என்றால் சரியல்ல. நான் பொருளாதாரா ரீதியாக கஷ்டப்படுவதாக இந்த வழக்கிற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 2,3 எதிர்மனுதாரர்களை பொறுத்து இந்த மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down before me in open court and read over to the witness and acknowledge by him to the correct

I Additional District Judge,

Tirunelveli.